Department of Education, Sabaragamuwa Province/ Weekly School

மாகாண கல்வித் திணைக்களம் சபரகமுவ – வாராந்தப் பாடசாலை

விடயம் : குடியியற் கல்வி

வாரம் : 10

தரம் :06

தயாரிப்பு : மாவனல்லை வலயம்

**அலகு 1. எமது பாடசாலை.**

**உப அலகு 1.1 எமது பாடசாலை வரலாறு.**

- பாடசாலையின் வரலாறு என்பதனால் கருதப்படுவது ஆரம்பிக்கப்பட்ட திகதியில் இருந்து இன்று வரை காணப்படும் மாற்றங்கள் பற்றிய தகவல்கள் ஆகும்.
- பிரதேசத்தில் பாடசாலை ஆரம்பிப்பதற்கு அடிப்படையாக அமைந்த காரணிகள்.
  - சனத்தொகை அதிகரிப்பு.
  - அண்மையில் பாடசாலை ஒன்று இல்லாமை.
  - அரசாங்கத்தின் கொள்கை.
  - சமூகத்தின் தேவை.

போன்ற காரணிகளைக் குறிப்பிடலாம்.

- பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட முறை.
  - அரசாங்கப் பாடசாலையாக.
  - தனிப்பட்டவர்களின் நன்கொடையாக.
  - தனவந்தர் ஒருவரின் அல்லது செல்வம் படைத்த ஒருவரின் அன்பளிப்பாக.
  - சமய வழிபாட்டு இடமாக.
  - சமய வழிபாட்டு இடத்தை அடிப்படையாகக் கொண்டு.

போன்ற விடயங்களை அடிப்படையாக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம்.

**ஒப்படை:-**

1. உங்கள் பாடசாலையின் வரலாறு தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ள உதவும் மூலாதரங்கள் 5ஐக் குறிப்பிடுக.
2. உங்கள் பாடசாலையின் வளர்ச்சியில் முக்கியமான நிகழ்வுகள் நடைபெற்று இருந்தால் அது நடைபெற்ற வருடத்தைக் குறிப்பிடுக.
   உதாரணம்.
     - கனிஷ்ட வித்தியாலயமாக தரம் உயர்த்தப்படுதல்
     - மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தப்படுதல்
     - மத்திய கல்லூரியாக தரம் உயர்த்தப்படுதல்
3. உங்கள் பாடசாலையில் கற்று வெளியேறி பாடசாலைக்கு பெருமை சேர்க்கின்ற பழைய மாணவர்கள் சிலரின் பெயர்களைப் பட்டியற்படுத்துக. அவர்கள் புகழ்பெற்ற துறையை குறிப்பிடுக.
4. “உங்கள் பாடசாலையின் வரலாறு” தொடர்பான சுவர் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை எழுதுக.
5. தரம் ஆறு குடியியற் கல்வி புத்தகத்தின் அலகு 1 இன் செயற்பாடு 1 இல் வினா 1 மற்றும் 2 ஆகியவற்றிற்கு விடைதருக.